விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியது கருத்துகளால்; காவல்துறை நடவடிக்கைகளால் அல்ல!

சதியில் ஈடுபட்ட விர்ச்சுவல் விஷமிகளைக் கண்டறிந்து - அத்துமீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

பேராசிரியர் கலையரசனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து விடுத்த பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – த.வெ.க. அரசுக்கு வலியுறுத்தல்!

சென்னை, நவ. 2– பேராசிரியர் கலையரசனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து விடுத்த வலைதளப்பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "சதியில் ஈடுபட்ட விர்ச்சுவல் விஷமிகளைக் கண்டறிவதோடு, அத்து மீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும் அவசியம்!" என்று அரசுக்கு நினைவூட்டியுள்ளார்.



கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

கேள்விகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது நல்லாட்சியல்ல; கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிர்வாகத்தை உருவாக்குவதுதான் நல்லாட்சி! விமர்சனங்களை உள்வாங்கித் தமது தவறுகளைத் திருத்திக்கொள்வதுதான் ஜனநாயகத்தின் மாண்பு! விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியது கருத்துகளால்; காவல்துறை நடவடிக்கைகளால் அல்ல!

Fake IDயின் Commentஐக் காரணமாகச் சொல்லி, அதிகாலையில் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பேராசிரியர் கலையரசன் அவர்கள், தமக்கு நேர்ந்த அநீதிக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பி வெளிவந்திருப்பதற்கு எனது வாழ்த்துகள்!

சதியில் ஈடுபட்ட விர்ச்சுவல் விஷமிகளைக் கண்டறிவதோடு, அத்து மீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும் அவசியம் என்பதை அரசுக்கு நினைவூட்டுகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



'கரப்ஷன்' குமார் நிர்வாகத்தில் சீரழியும் சிறைத்துறை!

கோவை சிறையிலிருந்தும் கைதி தப்பி ஓட்டம்!

சுதந்திரமாகத் திரியும் குற்றவாளிகள்!

கோவை, நவ. 2 –

கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் காவல் நிலையத்தில் திருட்டு உள்ளிட்ட வழக்கில் கைது செய்யப்பட்டவர் ராகவன். இவரை போலீசார் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்திவிட்டு கோவை சிறையில் அடைக்க அழைத்து வரப்பட்டபோது சிறை வளாகத்தில் இருந்து தப்பி ஓடியுள்ளார். கோவை மத்திய சிறையின் முதல் நுழைவு வாயிலில் இருந்து 2வது நுழைவு வாயிலுக்கு அழைத்துவந்தபோது, அவரது கையில் போடப்பட்டிருந்த விலங்கினை போலீசார் அகற்றினர். அந்த நேரத்தில் திடீரென ராகவன் அங்கிருந்து தப்பிச்சென்றார். தப்பியோடிய கைதி ராகவனை விரைவாக பிடிக்கும் முயற்சியில் ரேஸ்கோர்ஸ் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி



உள்ளது.

தேனி மாவட்டம் தேக்கம்பட்டியில் உள்ள மாவட்ட சிறையில் கடந்த 26ந்தேதி சிறைக் காவலர்களை தாக்கிவிட்டு 17 கைதிகள் தப்பி ஓடினர். போலீசாரின் நீண்ட தேடுதல் வேட்டைக்கு பிறகு அவர்கள் அனைவரும் பிடிபட்டனர். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கைதிகள் தப்பி ஓடிய சம்பவம் எதிரொலியாக சிறைக் காவலர்கள் 9 பேர் அதிரடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். அதன் தொடர்ச்சி யாக சிறைத்துறை டி.ஜி.பி. சந்தீப்ராய் ரத்தோர் மாற்றப் பட்டார்.

அன்னூர் காவல் நிலையக் காவலர்களால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இராகவன் அப்போதே காவலர்களின் பிடியில் இருந்து தப்பி ஓடியுள்ளார். அவரை காவல்துறை யினர் துரத்திப் பிடித்து தான் நீதி மன்றத்தில் நேர் நிறுத்தியுள்ளனர். இதைக் கவனத்தில் கொண்டு கோவை சிறை வளாகத்தில் கைதி இராகவனை பாதுகாப்புடன் கையாண்டிருக்க வேண்டும். சிறைக்காவலர்கள் அலட்சியமாக நடந்து கொண்டதே இதற்கு காரணம் ஆகும்.

கேரள மாநில தி.மு.க.

முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ரகுபதி மறைவு!

கே.ஆர்.முருகேசன் – முன்னணியினர் இறுதி அஞ்சலி!

திருவனந்தபுரம், நவ.2- கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் தற்போதைய கேரள மாநில தி.மு.க. பொறுப்புக் குழு உறுப்பினருமான ஆர்.ரகுபதி(83) அவர்கள் வயது மூப்பு காரணமாக நேற்று (01.11.2026) காலை 3 மணியளவில் திருவனந்தபுரம் கரமனை தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரது இறுதிச் சடங்கு இன்று காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து இறுதி ஊர்வலம் காலை 10 மணியளவில் இல்லத்தில் இருந்து புறப்பட்டு சாந்தி கவாடம் சென்றடைகிறது. அங்கு இறுதி சடங்குகள் நடைபெறுகின்றன.

கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் மற்றும் கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பலர் அன்னாரது உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஈரோட்டில் த.வெ.க. அரசைக் கண்டித்து மகளிரணியினர் ஆர்ப்பாட்டம்!

ஈரோடு, நவ. 2- தவெக அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பாதுகாப்பின்மை, பெண் குழந்தைகளுக்கு பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழக மகளிரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் ரீல்ஸ் தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழக மகளிரணி சார்பில் ஈரோடு தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திலகவதி தலைமையில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், முன்னிலையில் தலைமை கழக பேச்சாளர் நாகநந்தினி கண்டன உரையாற்றினார்.

ஆர்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாச்சலம், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன், எம்.பி.அறிவானந்தம், ப.க.பழனிச்சாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், ஈரோடு மேயர் சு.நகரத்தினம், கீதா நடராஜன் வடக்கு மாவட்ட அமைப்பாளர் சவுண்டம்மாள் நகர மன்ற தலைவர்கள் சத்தியமங்கலம் ஜானகி ராமசாமி, பவானி சிந்தூரி இளங்கோ, தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பேபி, ஒன்றிய கழக செயலாளர்கள் ப.செங்கோட்டையன், சு.குணசேகரன், வ.கதிர்வேல், ஆர்.விஜயகுமார், இ.பெரியசாமி சிறுவலூர் எஸ்.ஏ.முருகன், பவானி கே.ஏசேகர், எம்.சிவபாலன்,

கோரக்கார்ட்டூர் ரவீந்திரன், கே.கே.சண்முகம், பகுதி கழக செயலாளர்கள் குமாரவடிவேல், வி.சி.நடராஜன், வே.செல்வராஜ், அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், குறிஞ்சி என்.தண்டபாணி, க.லட்சுமணகுமார், தலைமை கழக பேச்சாளர் பவானி கண்ணன், இளைஞரணி அமைப்பாளர்கள் ஈரோடு தெற்கு ஜெ.திருவாசகம், வடக்கு திருவேங்கடம், மாணவரணி அமைப்பாளர் தனசேகர் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய. பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், மகளிரணியினர் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டி.என். பாபு (எ) இளவழகன்

நவம்பர் 2 (2003)



நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; "பேராசிரியர் கலையரசனை உள்ளூர் போலீசார் தவறுதலா கைது பண்ணிட்டாங்க. அதுக்காக நாங்க அவரிடம் மன்னிப்பு கேட்டுட்டோம்"ன்னு ஒரு அமைச்சர் சொல்லி இருக்காரே! தெரியுமா?

பட்டணம் : ஆமாமய்யா; 'திராவிட மாடல்'ன்னு ஆங்கிலத்திலே ஒரு புத்தகம் எழுதி இருக்கார் அவர். அதுதான் இவங்க கண்ணை உறுத்தி இருக்கு. 'நீ அடிப்பது போல அடி; நான் அழுவதுபோல அழற?'ன்னு சொல்ற பழமொழிதான் ஞாபகத்துக்கு வருது. இப்படியும் ஒரு கவர்ன்மெண்ட்.